மெட்ரோ ரெயில்நிலையத்தில்

# மரக்கன்றுகள் நடப்பட்டன!

## பேரணியும் நடந்தது!!

சென்னை, ஜூன். 06–

உலகசுற்றுப்புறசூழல்தினமான நேற்று சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் சார்பில் மரக்கன்றுகள் நேற்று நடப்பட்டன.

பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ ரெயில் நிலையத்தில் 150 மரக்கன்றுகள் நடப்பட்டன.

அதே நேரத்தில் 50 மெட்ரோ ரெயில் நிலைய பணியாளர்கள் சைக்கிள்களில் உலக சுற்றுப்புற சூழல் தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு சைக்கிள் பேரணி நடத்தினார்கள்.

திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ ரெயிலை நிலையம் வரை இந்த பேரணி நடந்தது.

அதில் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.